# ஜனவரி – 15 – திங்கள்

தூய வனத்து சின்னப்பர்

**நீங்கள் கொண்டுவரும் பலிகளை முன்னிட்டு நான் உங்களைக் கண்டிக்கவில்லை: திபா. 50:8**

---

## முதல் வாசகம் : 1 சாமுவேல் 15 : 16 - 23

அக்காலத்தில் சாமுவேல் சவுலை நோக்கி, ”நிறுத்தும், இன்றிரவு ஆண்டவர் எனக்கு கூறியவற்றை உமக்குச் சொல்கிறேன் ”என சவுல், ”சொல்லுங்கள்” என்றார் சாமுவேல் கூறியது ”நீர் உமது பார்வைக்கே சிறியவராய் இருந்தபோதல்லவா இஸ்ரயேல் குலங்களுக்குத் தலைவர் ஆனீர்? ஆண்டவரும் உம்மை இஸ்ரயேலுக்கு அரசராகத் திருப்பொழிவு செய்தார். ஆண்டவர் உமக்கு வழிகாட்டி, நீ சென்ற அந்தப் பாவிகளான அமலேக்கியரை அழித்து விட்டு வா. இறுதிவரை போரிட்டு அவரை ஒழித்துவிடு” என்று சொன்னார். அப்படியிருக்க, நீர் ஏன் ஆண்டவரின் குரலுக்குச் செவி கொடுக்கவில்லை? கொள்ளைப் பொருள் மீது பாய்ந்து ஆண்டவரின் பார்வையில் தீயதெனப்பட்டதைச் செய்ததேன்? அதற்குச் சவுல், சாமுவேலை நோக்கி, ”ஆண்டவரின் குரலுக்கு நான் செவி கொடுத்தேன். அவர் காட்டிய வழியிலும் சென்றேன். அமலேக்கியரின் மன்னன் ஆகாகைக் கொண்டு வந்தேன். ஆனால் அமலேக்கியரை அழித்து விட்டேன். ஆனால் வீரர்கள் உம் கடவுளாகிய ஆண்டவருக்குக் கில்காலில் பலி செலுத்த, தடை செய்யப்பட்ட கொள்ளைப் பொருளினின்று சிறந்த ஆடுகளையும், மாடுகளையும் கொண்டு வந்தனர்” என்றார். அப்பொது சாமுவேல் கூறியது ”ஆண்டவருக்கு மகிழ்ச்சி தருவது எரி பலிகள் பிற பலிகள் செலுத்துவதா? அவரது குரலுக்கு கீழ்ப்படிவதா? கீழ்படிதல் பலியைவிடச் சிறந்தது. கீழ்படிதல் ஆட்டுக் கிடாய்களின் கொழுப்பை விட மேலானது! கலகம் சூனியத்திற்கு நிகரான பாவம்! முரட்டுத்தனம் சிலை வழிப்பாட்டுக்கு ஒப்பான குற்றம். நீர் ஆண்டவரின் வார்த்தையை புறக்கணித்தீர்! அவரும் உம்மை அரசப் பதவியினின்று நீக்கிவிட்டார்.

**பதில்பாடல் :** தம் வழியைச் செம்மைப்படுத்துவோர் எனது மீட்பைக் கண்டடைவர்

## நற்செய்தி : மாற்கு 2 : 18 - 22

அக்காலத்தில் யோவானுடைய சீடரும் பரிசேயரும் நோன்பு இருந்துவந்தனர். சிலர் இயேசுவிடம், ”யோவானுடைய சீடர்களும் பரிசேயருடைய சீடர்களும் நோன்பிருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பிருப்பதில்லை?” என்று கேட்டனர். அதற்கு இயேசு அவர்களை நோக்கி, ”மணமகன் தங்களோடு இருக்கும்வரை மணவிருந்தினர்கள் நோன்பு இருக்கமுடியுமா? மணமகன் அவர்களோடு இருக்கும் காலமெல்லாம் அவர்கள் நோன்பிருக்க முடியாது. ஆனால் மணமகன் அவர்களைவிட்டுப் பிரியவேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள். எவரும் பழைய ஆடையில் புதிய துணியை ஒட்டுப்போடுவதில்லை. அவ்வாறு ஒட்டுப்போட்டால், அந்த புதிய துணி பழையதிலிருந்து கிழியும்? கிழிசலும் பெரிதாகும். அதுபோலப் பழைய தோற்பைகளில், எவரும் புதிய திராட்சை மதுவை ஊற்றி வைப்பதில்லை. ஊற்றிவைத்தால் மது தோற்பைகளை வெடிக்கச் செய்யும் மதுவும் தோற்பைகளும் பாழாகும். புதிய மது புதுத் தோற்பைகளுக்கே ஏற்றது” என்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகமானது தூய்மை அல்லது பரிசுத்தம் என்னும் ’புண்ணியங்கள் எம்மத்தியில் காணப்படும் பொழுது எமது வாழ்வானது உயிரோட்டம் உள்ளதாயும், புத்துணர்ச்சி கொண்டதாயும் இருக்கும் என்பதை எடுத்துக் கூறுகின்றது. முதல் வாசகத்தில் பார்ப்பதுபோல் சவுல் சிறுவயதில் ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டு பாவிகளான அமலேக்கியவிலரை அழித்துவிடும்படி ஆண்டவர் கூற அவரது குரலுக்கு செவி கொடுக்கவில்லை. ஆனால் ஆண்டவரின் பார்வைக்கு தீயதெனப்பட்டதைச் செய்து அவருக்கு கீழ்ப்படியாமல் பாவத்திற்கு அடிமையானான். அதேபோன்று எங்களையும் இறைவன் நல்லது எது? கெட்டது எது? என்று வழிகாட்டியிருக்கின்றார். ஆனால் நாங்களோ மற்றவர்களின் தேவையற்ற பேச்சுக்களுக்கு அடிமையாகி தீய நாட்டங்கள், அருவருப்பான பேசுக்கள், கெட்டநடத்தைகள், சண்டை சச்சரவு. நான் என்ற அகந்தை, முரட்டுக் கௌரவம் இவற்றினால் பாவத்திற்கு அடிமையாகிவிடுகின்றோம். இவ்வாறான தீய செயல்களை இறைவன் வெறுக்கின்றார். எனவேதான் “கலகம் சூனியத்திற்கு நிகரானது, முரட்டுத்தனம் சிலைவழிபாட்டுக்கு ஒப்பான குற்றம்” இவ்வாறாக கூறுவதை (1சாமு.15:23)ல் பார்க்கின்றோம். அதனால் எமது வாழ்வும் பரிசுத்தமற்றதாயும், உயிரோட்டம் அற்றதாயும் காணப்படும். நற்செய்தி வாசகத்தில் உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை என்ற கேள்விக்கு மணமகனோடு அவர்கள் இருக்கும் பொழுது ஏன் நோன்பு இருக்க வேண்டும் என்று பதிலளிக்கின்றார். அவர்களது உள்ளத்தை அறிந்த அவர் அவர்களை தன்னோடு இணைத்துள்ளார். அதேபோன்று இனிவரும் நாட்களில் அவர்கள் போன்று பரிசுத்தமான உள்ளத்தோடு வாழ்வோமாயின் இறைவன் எங்களோடு இருக்கும் பொழுது நாங்களும் எதுவும் செய்யத்தேவையில்லை. எனவே அவருக்கேற்ற வகையில் பரிசுத்தமாக வாழ எங்களைத் தயார் படுத்துவோம்.